மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைமை இப்போது இல்லை. ஆனால் நாம் எல்லா பத்திரிகைகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறோம், கேட்டுக் கொள்ளவும் செய்வோம்.

ஊராட்சி விரிவாக்க அலுவலர்கள்

* வினா எண். 705.—திரு யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தேர்வுநிலைப் பேரூராட்சிகளில் முதல் நிலை நிர்வாக அதிகாரிகளில் அனுபவமிக்கவர்களை ஊராட்சி விரிவாக்க அலுவலர்களாக நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் தற்போது அத்திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தற்போது தேர்வு நிலைப் பேரூராட்சிகளில் பணிபுரிகின்ற நிர்வாக அதிகாரிகளும், முதல்நிலை பேரூராட்சிகளில் பணிபுரிகின்ற நிர்வாக அதிகாரிகளும் ஒரே விதமான பணியை ஆற்றிக் கொண்டிருக்கின்ற காரணத்தால் இத்தகைய ஒரு திட்டத்தை அரசு கொண்டுவருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மேலும் ஏற்கெனவே பரமோஷன் இல்லாமல் பலர் இருக்கின்ற காரணத்தால், இதனை ஏற்படுத்தினால் ப்ரமோஷன் வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தால், இந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனைக்கு தற்போதுள்ள பணிவிதிகளில் இடம் இல்லை. ஆனால் ஊரக வளர்ச்சித்துறைக்கு ஒரே பணிவிதி அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அது ஏற்படுத்தப்பட்டதற்குப் பிறகு இதுபற்றி பரிசீலிக்கப்படலாம்.